www.Padasalai.Net www.Trb Tnpsc.com of 2.

10 - STD

# தமிழ்

காலம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 100

குறிப்பு:

1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

## பகுதி - 1

I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக 1x15=15

1. ஆர்கலி என்பதன் பொருள்

அ) மலை ஆ) கடல் இ) வெல்லம் ஈ) நீர்

2. பூ வாடின நிலை ________

அ) வீ ஆ) செம்மல் இ) போது ஈ) மலர்

3. பெயர்ப் பயனிலையைக் கொண்ட எழுவாய்த்தொடர்

அ) இனியன் கவிஞன் ஆ) இனியன் வந்தான்

இ) இனியன் கூறினான் ஈ) இனியன் யார்?

4. நடவாமை என்பது ________தொழிற்பெயர்

அ) விடுதிபெற்ற ஆ) எதிர்மறை இ) முதனிலை ஈ) முதனிலை திரிந்த

5. முல்லை நில மக்களின் உணவுப் பொருள்கள்

அ) வெண்நெல், வரகு ஆ) மலைநெல், தினை

இ) வரகு, சாமை ஈ) மீன், செந்நெல்

6. ஐந்து என்பதன் தமிழ் எண்

அ) உ ஆ) சு இ) ரு ஈ) அ

7. ம.பொ.சி-யின் தன் வரலாற்று நூல் ________

அ) சிற்றன் ஒளி ஆ) நமது போராட்டம்

இ) எனது போராட்டம் ஈ) சிற்றல் கல்

மீளும் துயர் ஆ) மீள் துயர் இ) மீளாத் துயர் ஈ) மீளுக்கின்ற துயர்

8. இரண்டு அடிகள் முதல் பணிரெண்டு அடிகள் கொண்ட பா வகை ________

அ) வெண்பா ஆ) கலிப்பா இ) ஆசிரியப்பா ஈ) வஞ்சிப்பா

9. இருநாட்டு அரசர்களும் தும்பைபட பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்.

அ) நாட்டைக் காப்பற்றல் ஆ) ஆநிறை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிட்டல்

10. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று ________வேண்டினார்.

அ) கருணையன் எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத் தமக்காக

இ) கருணையன் பூக்களுக்காக ஈ) எலிசபெத் பூமிக்காக

11.மீளாத் துயர் - எதிர்மறையாக மாற்றுக.

அ) மீளும் துர் ஆ) மீள் துயர் இ) மீளாத்துயர் ஈ) மீளுகின்ற துயர்



kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.

பாடலைப் படித்து பின்வரும், வினாக்களுக்கு விடைதருக.

(12, 13,14,15)

உய்முறை அறியேன் ஓர்ந்த
உணர்வினொத்த உறுப்பும் இல்லா
மெய்முறை அறியேன் மெய்தான்
விரும்பிய உணவுதேட

12. இப்பாடல் இடம் பெறும் நூல் ________

அ) தேம்பாவணி ஆ) சிலப்பதிகாரம் இ) காலக்கணிதம் ஈ) நீதி வெண்பா

13. இப்பாடலின் ஆசிரியர் ____________

அ) இளங்கோவடிகள் ஆ) கண்ணதாசன் இ) வீரமாமுனிவர் ஈ) கம்பர்

14. உய்முறை என்பதன் இலக்கண குறிப்பு________

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) உவமைத் தொகை ஈ) உம்மைத் தொகை

15. ஓர்ந்து என்பதன் பொருள் ________

அ) விலகி ஆ) இணைந்து இ) நினைந்து ஈ) மறந்து

## பகுதி - II மதிப்பெண்கள் 18

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி:** 4x2=8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க

அ) சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள்

ஆ) திருக்குறள் உலகப் பொதுமறை என்றழைக்கப்படுகிறது.

17. வசன கவிதை - குறிப்பு வரைக

18. தமிழ்ச்சொல் வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.ஷ

19. ஜெயகாந்தனின் திரைப்படமான படைப்புகள் நான்கு கூறு? ஷ

20. சரயு ஆறு அவ்விடங்களிலெல்லாம் பரவிப் பாய்ந்ததாக கம்பர் குறிப்பிட்டுள்ளார்?

21."பொருள் என முடியும் திருக்குறள்களை எழுது.

## பிரிவு -2

**5வினாக்களுக்கு மட்டும் விடையளி** 5x2=10

22. கலைச்சொல் தருக.

அ) Intellectual ஆ) Symbolism

23. பொருள்கோள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

24. மலர் உண்டு, பெயர் உண்டு இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக.

25. மயங்கிய - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

26. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.

அ) வரப் போகிறேன். ஆ) இல்லாமல் இருக்கிறது.

27. முயற்சி திருவினை ஆக்கிடும் முயற்சியின்மை இன்மை புகுத்திவிடும் இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோள்களின் வகையைச் சுட்டி விளக்குக.

28. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?



kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.

பகுதி – II மதிப்பெண்கள் 18

பிரிவு -1

இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி 2x3=6

29. "புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது" இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. செய்கு தம்பிப்பாவலர் ஏன் சதாவதானி என்று போற்றப்படுகிறார்?

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

கவை - அடிமரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை

கொம்பு - கவையின் பிரிவு, போத்து - சினையின் பிரிவு

சினை - கிளையின் பிரிவு, போத்து - சினையின் பிரிவு

குச்சு - போத்தின் பிரிவு, இணுக்கு - குச்சியின் பிரிவு

அ.குச்சியின் பிரிவு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

ஆ.கிளை என்பது எதன் பிரிவு

இ. உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

பிரிவு-II 2 X 3 = 6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி:

34-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32.தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்களையும் அதற்குரிய தாவரங்களின் பெயர்களையும் எழுது.

33. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ. "தண்டலை" எனத் தொடங்கும் கம்பராமாயண மனப்பாடப் பாடல்

ஆ. "தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்

பிரிவு-III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2x3=6

35. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்தாழா துஞற்று பவர் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

36. தீவக அணியைச் சான்றுடன் விளக்குக.

37. வினா வகைகளைச் சான்றுடன் விவரி?

பிரிவு- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: மதிப்பெண்: 25

38. அ) மனோன்மணியம் சுந்தரனாரின் "தமிழ்த்தாய்" வாழ்த்துப் பாடலையும் "பெருஞ்சித்திரனாரின்" அன்னை மொழியே பாடலையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

(அல்லது)



kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும், உருவக. முலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரி?

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும். விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவிணுற கவிதை ஒன்று எழுதுக.




41. படிவத்தை நிரப்புக

மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

42. கைபேசியில் மூழ்கியிருக்கும் உனது தம்பிக்கு

(அ) நீ கூறும் அறிவுரைகள் 5 கூறு?

ஆ) மொழி பெயர்க்க

1. Tomorrow is often the busiest day of the week – Spanish proverb.

2. Education is what remains after one has forgotten what one has learned in school albert Einstein.

பிரிவு-V

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 3x8=24

43.அ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க?

(அல்லது)

ஆ) பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

44. அன்னமையா என்னும் பெயருக்கும் அவரின்

அ) செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க?

(அல்லது) ஆ) அழகரிசாமியின் "ஒருவன் இருக்கிறான்" எண்ணும் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45.தமிழர் உணவும் விருந்தோம்பலும் என்ற தலைப்பில்

அ) கட்டுரை வரைக

(அல்லது) ஆ) விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.